**செய்தி வெளியீடு எண் : 271** **நாள்: 25.02.2022**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் தாய்நாடு திரும்புவதற்கான பயணச் செலவைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்ளும் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு</u>

ரஷ்ய இராணுவம் 24-2-2022 அன்று உக்ரைன் நாட்டுக்குள் புகுந்து, இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சூழ்நிலையில், தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் 5,000 மாணவர்கள், பெரும்பாலும் தொழில்முறைக் கல்வி பயில்வோர் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் உக்ரைனில் சிக்கித் தவிக்கின்ற சூழ்நிலையை அறிந்து, அவர்களை மீட்டுத் தமிழகத்திற்கு அழைத்து வரும் பொருட்டு, மாவட்ட, மாநில அளவில் மற்றும் புதுதில்லியில் தொடர்பு அலுவலர்களை நியமனம் செய்து உதவிக்குத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இன்று (25-2-2022) காலை 10-00 மணி வரை தமிழ்நாட்டைச் சார்ந்த 916 மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தோர் தமிழ்நாடு அரசைத் தொடர்பு அலுவலர்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் உக்ரைனில் இருந்து தாய்நாடு திரும்புவதற்கு ஏற்படும் பயணச் செலவுகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக மாநிலத் தொடர்பு அலுவலரான திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகம் அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தொடர்பு எண்கள்**

| | |
|---|---|
| மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் கட்டணமில்லாத் தொலைபேசி எண் | 1070 |
| **திருமதி ஜெசிந்தா லாசரஸ், இஆப.,**<br>ஆணையர்,<br>அயலகத் தமிழர் நலன் மற்றும்<br>மறுவாழ்வு ஆணையரகம் | 9445869848<br>9600023645<br>9940256444<br>044 - 28515288<br>மின்னஞ்சல்<br>nrtchennai@gmail.com |
| உக்ரைன் அவசர உதவி மையம்<br>தமிழ்நாடு பொதிகை இல்லம்,<br>புதுதில்லி. | வாட்ஸ்அப் எண்<br>9289516716<br>மின்னஞ்சல்<br>ukrainetamils@gmail.com |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**